# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.38/2017**

திருமதி. ஜெயந்தி (D.W –5) **22.7.2025**

6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. 7ம் பிரதிவாதி தரப்பில் எந்த முறையீடும் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நான் வீரபாண்டியில் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். தாவா சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரி. பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் பங்குதாரர் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் பங்குதாரர்களாக என் மாமனார் ராமசாமியும் மற்றும் என் கணவரின் மூத்த சகோதரர் ரத்தினசாமி இருவர் பெயர் பங்குதாரர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி என் கணவரும் பங்குதாரர். என்னுடைய கணவர் எப்போதும் பிரின்ஸ் டையிங் ப்ளீச்சிங்கில் பங்குதாரராக பணியாற்றவில்லை தனியாக வேலை பார்த்து வந்தார் என்றால் தவறு. என்னுடைய திருமணத்திற்கு பிறகு என் கணவர் அவருடைய வீட்டில் தனியாக தொழில் செய்து வந்தார். என்னுடைய அப்பாவின் வியாபாரத்தில் பங்கு கொள்ளவில்லை என்றால் தவறு.

2. முதல் விசாரணையில் என்னுடைய கணவர் பிரின்ஸ் டையிங் மற்றும் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் நிறுவனங்களில் பங்குதாரராக இருந்து வந்தார் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. அசல் வழக்கு எண்.98/2021 ல் 8வது பிரதிவாதி சுத்திகரிப்பு நிலையத்தில் 220 கிலோ லிட்டர் தண்ணீர் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது பிரின்ஸ் டையிங்

நிறுவனத்திற்காகத்தான் வாங்கப்பட்டது என்றால் ஆமாம். என்னுடைய மாமனார் இறந்த பிறகு பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை ரத்தினசாமி நடத்தி வந்தார் என்றால் ஆமாம். இருவரும் நடத்தி வந்தார்கள். 220 கிலோ லிட்டர் தண்ணீரை பயன்படுத்திக் கொள்ளும் உரிமை ரத்தினசாமிக்கு மட்டுமே உண்டு மற்றவர்களுக்கு இல்லை என்றால் தவறு. என்னுடைய கணவர் பிரின்ஸ் டையிங் மற்றும் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் யூனிட்டில் பங்கு பெற்று வேலை பார்த்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். தவறாக சாட்சியம் அளிக்கிறேன் அம்மாதிரி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாரிசு கிரமபடி என்னுடைய அப்பாவின் அசையா சொத்தில் எனக்கு பாக உரிமை உண்டு 220 கிலோ வாட் தண்ணீரை பயன்படுத்துவதில் எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

அ.வ.எண். 98/2021 8ம் பிரதிவாதி மற்றும் அ.வ.எண். 100/2017 ல் வாதி இந்த வழக்கு 1 மற்றும் 5 பிரதிவாதி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கைபொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.22 19:17:38 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.